கடிதம் வென்றவர்
தேசிய நாளிதழ்
தலைவர் மற்றும் தலைமை ஆசிரியர்: அனில் குமார்
தெலுங்கானா,ஆந்திரா,கர்நாடகா,தமிழ்நாடு

| Friday 29th August 2025 | தொகுதி – 06 | பிரச்சினை – 09 | விலை – 6.00/– | vijethatelugudaily@gmail.com | www.Vijethadaily.com |
|---|---|---|---|---|---|



# ஜப்பான் சென்றார் பிரதமர் மோடி

கடிதம் வென்றவர்,டெல்லி: ஜப்பான், சீனாவில் பிரதமர் மோடி 4 நாட்கள் அரசு முறை பயணம் மேற்கொள்கிறார்.நேற்று இரவு ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்கு புறப்பட்டுச் சென்றார் பிரதமர் மோடி. அங்கிருந்து சீனா செல்லும் பிரதமர் மோடி, ஆகஸ்ட் 31 ஆம் தேதி அதிபர் ஜி ஜின்பிங்கை சந்தித்துப் பேசுகிறார்.அரசு முறை பயணமாக பிரதமர் மோடி நேற்று இரவு ஜப்பான் புறப்பட்டு சென்றார். டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் ஜப்பான் புறப்பட்டார் பிரதமர் மோடி. ஜப்பான் செல்லும் பிரதமர் மோடி அந்நாட்டு பிரதமர் ஷிகெரு இஷிபாவை சந்திக்கிறார்.இதனைத் தொடர்ந்து ஜப்பானில் நடைபெறும் 15வது இந்தியா - ஜப்பான் வருடாந்த உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி கலந்து கொள்கிறார். இந்த மாநாட்டின் போது இருநாடுகளுக்கு இடையேயான உறவு, வர்த்தகம், பாதுகாப்பு, பொருளாதாரம், தொழில்நுட்பம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் விவாதிக்க உள்ளனர்.ஜப்பான் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் மோடி 31 ஆம் தேதி சீனா செல்கிறார். அங்கு ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். மேலும், சீன அதிபர் ஜி ஜின்பிங், ரஷியா அதிபர் விளாடிமிர் புதின் உள்பட பல்வேறு தலைவர்களை பிரதமர் மோடி சந்திக்கிறார்.கடந்த 2018 ஜூன் மாதத்தில் சீனாவின் குயிங்தவோ நகரில் நடைபெற்ற எஸ்சிஓ மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்றார். கடந்த 2019-ல் லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கில் இந்தியா - சீனா வீரர்கள் இடையேஏற்பட்ட மோதல் காரணமாக சீனாவுக்கு செல்வதை பிரதமர் மோடி புறக்கணித்தார். இந்தச் சூழலில் சுமார் 7 ஆண்டுகளுக்குப் பிறகு எஸ்சிஓ மாநாட்டில் பங்கேற்க அவர் சீனாவுக்கு செல்வது குறிப்பிடத்தக்கது.

## சல்லி சல்லியாக நொறுங்கிய கட்டிடங்கள்..



கடிதம் வென்றவர், | கீவ்:

ரஷ்யாவின் எண்ணெய் உற்பத்தி மையங்களை குறிவைத்து உக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் அந்நாட்டில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் உக்ரைன் மீது உக்கிரத்தோடு பதில் தாக்குதல் நடத்தி வருகிறது ரஷ்யா. உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா நடத்திய ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதலில் 18 பேர் கொல்லப்பட்டதாகவும், அதில் நான்கு பேர் சிறுவர்கள் என தகவல் வெளியாகி இருக்கிறது. பலர் ஆபத்தான நிலையில் இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

## ரஷ்யாவை நிலைகுலைய வைத்த உக்ரைன்.



கடிதம் வென்றவர், | மாஸ்கோ:

ரஷ்யா உக்ரைன் இடையே மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக போர் தொடர்ந்து வரும் நிலையில் இரு நாடுகளும் மாறி மாறி தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த நிலையில் ரஷ்யாவை குறி வைத்து உக்ரைன் நடத்திய அதிநவீன ட்ரோன் தாக்குதலில் ரஷ்யாவின் எண்ணெய் கிணறுகள், சுத்திகரிப்பு ஆலைகள், பெட்ரோல் பங்குகள் தரைமட்டமாகியுள்ளன. இதனால் செயின்ட்பீட்டர்ஸ்பக் உள்ளிட்ட பல இடங்களில் கடும் பெட்ரோல் தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. இந்த நிலையில் ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்கும் இந்தியாவின் நிலையும் கேள்விக்குறியாகி உள்ளது.

**உலகப் புகழ்பெற்ற வேளாங்கண்ணி மாதா கோவில் திருவிழா..**

**சீனாவிடம் கேட்க துப்பில்லை.. கச்சத்தீவுதான் கிடைச்சதா? இலங்கையில் இருந்து விஜய்க்கு வந்த எதிர்ப்பு**

**ஆணவப் படுகொலைகளை தடுக்கதனிச்சட்டம் இயற்றஉத்தரவிட வேண்டும்.. உச்சநீதிமன்றத்தில் தவெகமனு!**



## ஆணவப் படுகொலைகளை தடுக்க தனிச் சட்டம் இயற்ற உத்தரவிட வேண்டும்

## உச்சநீதிமன்றத்தில் தவெக மனு!

கடிதம் வென்றவர்,டெல்லி: ஆணவப் படுகொலைகளைத் தடுக்க தனிச்சட்டம் கோரி உச்ச நீதிமன்றத்தில் தவெக தேர்தல் பிரச்சார மேலாண்மை பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா மனு தாக்கல் செய்துள்ளார்.நாடு முழுவதும் தொடர்ச்சியாக ஆணவப் படுகொலைகள் நடந்து வருவது அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகின்றன. தமிழ்நாட்டில் அண்மையில் நடைபெற்ற நெல்லை ஐ.டி ஊழியர் கவின் ஆணவப் படுகொலை சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.இதனைத் தொடர்ந்து பல்வேறு கட்சியினரும் ஆணவப் படுகொலைகளுக்கு எதிரான தனிச்சட்டம் இயற்ற வலியுறுத்தி வருகின்றனர். அண்மையில் திமுக கூட்டணி கட்சி களான விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆகியவை தமிழ் நாடு முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்து வலியுறுத்தினர்.இந்த நிலையில் ஆணவ படுகொலையை தடுக்கும் தனிச் சட்டத்தை இயற்றுமாறு மத்திய மாநில அரசுகளுக்கு உத்தரவிடக்கோரி தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் பிரசார மேலாண்மை பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.



## ரஷ்யா தாக்குதல்

நகரின்10பகுதிகளில் 33க்கும்மேற்பட்ட இடங்கள் தாக்குதலுக்குள்ளாகின. குடியிருப்புகள், பள்ளிகள், மருத்துவமனைகள், அலுவலகங்கள்என பொதுமக்கள்வசிக்கும் பகுதிகளேநேரடி இலக்காகமாறின. ரஷ்யாவின் நூற்றுக்கணக்கான ஏவுகணைகள், ட்ரோன்கள்நடத்திய துல்லியத்தாக்குதலில் ஐரோப்பியஒன்றிய அலுவலகம்,பிரிட்டிஷ் கவுன்சில், அஜர்பைஜான் தூதரகம்,துருக்கி வணிகநிறுவன அலுவலகம்உள்ளிட்ட பலவெளிநாட்டு நிறுவனங்களின் கட்டிடங்கள் சிதைந்தன.

சமீபத்தில் உக்ரைன், ரஷ்ய எல்லைப் பகுதிகளில் பல ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியது. குறிப்பாக, மாஸ்கோவுக்கு அருகிலுள்ள சில இராணுவத் தளங்கள் மற்றும் எண்ணெய் சேமிப்புக் கிடங்குகள் தாக்கப்பட்டன.அதற்கு பதிலடியாகவே ரஷ்யா இப்போது கீவ் மீது மிகப்பெரிய தாக்குதலை நடத்தியதாக சர்வதேச பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன. வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் கீவ் நகரம் முழுவதும் வெடிச் சத்தங்கள் கேட்டன.

வோலோடிமிர் ஜெலன்ஸ்கி

தாக்குதல் தொடர்பாக உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தனது 'எக்ஸ்' பக்கத்தில், "அமைதிப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் உலகம் பல மாதங்களாக விவாதிக்கிறது. ஆனால் ரஷ்யா அதற்குப் பதிலாக குழந்தைகளையும் பெண்களையும் கொன்று குவிக்கிறது. இது ஒரு போர்க் குற்றம். ஒவ்வொரு தாக்குதலுக்கும் ரஷ்யா விலையைக் கொடுக்க வேண்டும்" எனக் கடுமையாக கண்டித்துள்ளார்.

ஏவுகணை தாக்குதல்

தற்போது கிடைத்த தகவலின்படி ரஷ்யாவின் தாக்குதலால், கீவ் நகரில் ஒரு 10 மாடிக் குடியிருப்பு கட்டிடம் இடிந்து விழுந்ததால் பல குடும்பங்கள் இடிபாடுகளில் சிக்கியுள்ளன. மீட்புப் படை வீரர்கள் இரவு பகலாக தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர். குழந்தைகளுடன் தூங்கிக் கொண்டிருந்தபோது திடீரென கட்டிடம் இடிந்தது, அடுத்த நொடியில் எங்கள் வாழ்க்கையே மாறிவிட்டது என இந்தத் தாக்குதலில் உயிர் பிழைத்தவர் கண்ணீர் மல்கக் கூறியுள்ளார்.



## ரஷ்யாவை நிலைகுலைய வைத்த உக்ரைன்.

நேட்டோ மற்றும் டான்பாஸ் பகுதிகளை காரணம் காட்டி உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா ராணுவம் கடந்த 2022 பிப்ரவரி மாதத்தில் போரை தொடங்கிய நிலையில், 3 ஆண்டுகள் முடிந்து 4ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள போதிலும், போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.உக்ரைன் மீது உடனான ரஷ்யாவின் போரால் உக்ரைன் நாட்டில் இருந்து சுமார் 45 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக குடியேறி வருகின்றனர். இதனால் அங்கு நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது.

உக்ரைன் போர்

போரை நிறுத்த பல்வேறு உலக நாடுகளும் கோரிக்கை விடுத்த நிலையில் ரஷ்யா அதனை மறுத்து வருகிறது. குறிப்பாக ஐநா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கோரிக்கையை ரஷ்யா நிராகரித்து விட்டது. இதற்கிடையே உக்ரைன் மீது மீண்டும் தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தி உள்ளது. ரஷ்யா தங்கள் மீது தாக்குதல் நடத்திவரும் நிலையில் அதற்கு பதிலடியாக உக்ரைன் மீது தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது. குறிப்பாக ரஷ்யாவுக்கு எண்ணை ஏற்றுமதி மிகப் பெரிய அளவில் கை கொடுக்கும் நிலையில் அதனை குறி வைத்து அதிநவீன ட்ரோன்கள் மூலம் உக்ரைன் தாக்குதல் நடத்தி வருகிறது.

ரஷ்யா பெட்ரோல் டீசல் தட்டுப்பாடு

இதனால் அங்கு கடும் பெட்ரோல் டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டதாக சொல்லப்படுகிறது. ரஷ்யாவின் எண்ணெய் கிணறுகள், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் பெட்ரோல் பங்குகள் ஆகியவற்றை குறி வைத்து ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கும் நிலையில் கிரிமியா, செயின்ட்பீட்டர்ஸ்பக் உள்ளிட்ட பல பகுதிகளில் கடும் பெட்ரோல் டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. இதனால் வாகன ஓட்டிகள் கடும் இன்னலை சந்தித்து இருக்கின்றனர். பெட்ரோல் பங்குகளில் இருந்து பல கிலோமீட்டர் நீளத்திற்கு வாகனங்கள் அணிவகுத்து நிற்கின்றன.

அமெரிக்க எச்சரிக்கை

இந்த நிலையில் ரஷ்யாவிடம் இருந்து குறைந்த விலைக்கு எண்ணெய் பெற்று வரும் இந்தியாவின் நிலை கேள்விக்குறியாகி உள்ளது. ஏற்கனவே இந்தியாவிடம் ரஷ்யாவில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யக்கூடாது என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்து இருந்தார். ஆனால் அதனை இந்தியா ஏற்றுக்கொள்ளாத நிலையில் தான் 50% வரி விதிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் தற்போது உக்ரைன் ரஷ்யாவின் எண்ணெய் உற்பத்தி மையங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி இருக்கும் நிலையில் அதற்கு அமெரிக்கா பின்னணியில் இருந்து செயல்பட்டு இருக்கலாம் என சொல்லப்படுகிறது.

ரஷ்யா இந்தியா

அமெரிக்காவின் பேச்சை கேட்காதால், இந்தியா எண்ணெய் இறக்குமதி செய்யும் ரஷ்யாவின் இந்தியா உற்பத்தி தளங்களை உக்ரைன் மூலம் தாக்கி இருக்கலாம் என சொல்கின்றனர் உலக பொருளாதார நிபுணர்கள். அதே நேரத்தில் ரஷ்யாவிடம் இருந்து பெருமளவிலான இந்தியா இறக்குமதி பாதிக்கப்படும் என்பதால், இந்தியாவிலும் வரும் காலத்தில் பெட்ரோல் டீசல் தட்டுப்பாடு ஏற்படலாம் என சொல்லப்பட்டாலும் அரபு நாடுகள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து இந்தியா பெட்ரோல் மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதால் பிரச்சனை வராது என்றும் கணிக்கப்படுகிறது.

## உலகப் புகழ்பெற்ற வேளாங்கண்ணி மாதா கோவில் திருவிழா..



கடிதம் வென்றவர், | நாகப்பட்டினம்:

நாகப்பட்டினம்: உலகப் புகழ்பெற்ற வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலய ஆண்டுப் பெருவிழா கொடியேற்றத்துடன் இன்று மாலை தொடங்க உள்ளது. நாகை மாவட்டத்தில் வரும் செப். 8 ஆம் தேதி உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.நாகப்பட்டினத்தில் உள்ள வேளாங்கண்ணியில் புனித ஆரோக்கிய அன்னை பேராலயம் அமைந்துள்ளது. இந்த பேராலாயம், உலகப்புகழ் பெற்ற கிறிஸ்துவ பேராலாயங்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்த பேராலாயத்தில் ஒவ்வொரு ஆண்டும் பெருவிழா வெகு விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அந்தவகையில், புகழ்பெற்ற ஆரோக்கிய அன்னை பேராலய ஆண்டு பெருவிழா இன்று மாலை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. ஞ்சை மறை மாவட்ட ஆயர் சகாயராஜ் கொடியை புனிதம் செய்து வைக்கிறார்.இதைத்தொடர்ந்து பேராலய கலையரங்கில் மாதா மன்றாட்டு, நற்கருணை ஆசீர், தமிழில் திருப்பலி நடக்கிறது. விழாவில் பேராலய அதிபர், பங்கு தந்தைகள், உதவி பங்குதந்தைகள் அருட்சகோதரிகள் கலந்துகொள்கிறார்கள். விழா நாட்களில் பேராலயத்தில் தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம், கன்னடம், கொங்கனி, தெலுங்கு உள்பட பல்வேறு மொழிகளில் சிறப்பு திருப்பலி நிறைவேற்றப்படும்.10 நாட்கள் நடைபெறும் இந்த பேராலயத் திருவிழாவை காண வெளிமாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் குவிந்து வருகின்றனர். ஏராளமான பக்தர்கள் மொட்டை அடித்து கடலில் நீராடிவிட்டு, வேளாங்கண்ணி பேராலயத்தில் மெழுகுவத்தி ஏந்தி பிரார்த்தனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்துக்கு வரும் பக்தர்களுக்குத் தேவையான தங்குமிடம், கழிப்பறை, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை, மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து வேளாங்கண்ணி பேரூராட்சி மற்றும் பேராலய நிர்வாகம் செய்து வருகின்றன. இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் தீவிரமாக நடைபெற்றுள்ளன.இந்த விழாவில் முக்கிய நிகழ்வாக திருக்கொடி ஊர்வலமும், தேர்பவனியும் நடைபெறும். இந்த விழாவிற்கு லட்சக்கணக்கான மக்கள் வருகை தருவார்கள். பெருவிழாவின் போது வாண வேடிக்கைகள் கோலாகலமாக நடைபெறும். இந்த விழாவிற்காக மின்விளக்குகள் அனைத்தும் பொருத்தப்பட்டு அந்த சுற்றுப்பகுதி முழுவதும் ஜொலிக்கும் வகையில் ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன.

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலய ஆண்டுப் பெருவிழாவை முன்னிட்டு வரும் செப்டம்பர் 8 ஆம் தேதி நாகை மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை அறிவித்து நாகை மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், நாகை மாவட்டம் கீழ்வேளூர் வட்டம் வேளாங்கண்ணி ஆண்டு பெருவிழா கொடியேற்றத்துடன் வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 29) தொடங்கி செப்டம்பர் 8-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

# சீனாவிடம் கேட்க துப்பில்லை..

## கச்சத்தீவுதான் கிடைச்சதா? இலங்கையில் இருந்து விஜய்க்கு வந்த எதிர்ப்பு






கடிதம் வென்றவர்,கொழும்பு: கச்சத்தீவு எங்களுடையது அதை விட்டு தர முடியாது என வரலாறு தெரியாத நடிகருக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றும், கச்சத்தீவை மீட்க போராடும் மோடி அரசுக்கும், விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்திற்கும் சீனாவிடம் பறிபோகும் நிலங்களை பற்றி கேட்க துப்பிருக்கிறதா என்று இலங்கை தொழிலாளர் சமூக கூட்டமைப்பு தலைவர் என்.வி சுப்பிரமணியம் கேள்வி எழுப்பியுள்ளார்.தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் இரண்டாவது மாநில மாநாட்டில் பேசிய விஜய், பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேசினார். குறிப்பாக இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள். மீனவர் பிரச்சினைக்கு தீர்வாக, இலங்கையிடம் இருந்து கச்சத்தீவை மீட்க பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.விஜய்யின் இந்த பேச்சை இலங்கை அரசியல் கட்சிகள் விமர்சித்து வருகின்றன. நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத், தென்னிந்தியாவில் தேர்தல் காலம் என்பதால் இப்படியாக கருத்து வெளிப்படுகிறது. இதனை நாம் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. அரசு பொறுப்பில் இருந்து யாராவது பேசியிருந்தால் அதன் மீது கவனம் செலுத்தலாம்இதையெல்லாம் பொருட்படுத்த வேண்டியது இல்லை. கச்சத்தீவை இந்தியாவுக்கு ஒருபோதும் விட்டுத்தர மாட்டோம்" என்று பேசியிருந்தார். இந்த நிலையில், வரலாறு தெரியாத ஓர் நடிகருக்கு, கச்சத்தீவு எங்களுடையது, இதை விட்டுத் தர முடியாது" என்று நமது அமைச்சர் பதில் கூற தேவையில்லை என்றும், சீனாவிடம் பறிபோகும் நமது நிலத்தை மீட்பதற்கு மத்திய அரசுக்கும், தமிழக வெற்றிக் கழகத்திற்கும் துப்பிருகிறதா என்று இலங்கை தொழிலாளர் சமூக கூட்டமைப்பு தலைவர் என்.வி சுப்பிரமணியம் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழக மீன்வர்களின் வாக்குகளை பெற

இது தொடர்பாக சுப்பிரமணியம் கூறியிருப்பதாவது:- கடந்த 21 ஆம் தேதி மதுரையில் நடந்த மாநாட்டின் போது தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், கச்சத்தீவு இந்தியாவுக்கு சொந்தம் என்று கூறியுள்ளார். அந்த கட்சிக்கு அவர் கத்துக்குட்டி அரசியல்வாதி. இந்த விஷயமானது கவலையாக தெரிந்தாலும், வாக்கு வங்கிக்காக தான் அவர்கள் இப்படி பேசுகிறார்கள். தமிழக மீனவ மக்களை ஏமாற்றி அவர்கள் வாக்கை கவர்வதற்காகவே இப்படி பேசுகின்றனர்.இலங்கை - இந்தியா இடையே செய்யப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் என்னென்ன என்பது தெரியாமலேயே, அது தொடர்பான கருத்துக்களை அறியாமலேயே விஜய் இப்படி, மீனவ மக்களின் ஓட்டுக்களை பெற பேசியிருக்கிறார். பழம் பெரும் அரசியல் தலைவர்களுக்கு கூட தெரியும், கட்சத்தீவை இலங்கையில் இருந்து மீட்க முடியாது என்று. எனவே கச்சத்தீவு விஷயத்தை அரசியல் ஆக்கி தமிழக மீன்வர்களின் வாக்குகளை பெறுவதே அவர்களது நோக்கம். இதை தவிர வேறு எந்த நோக்கமும் இருந்தது போல் தெரியவில்லை.

விஜய் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது

ஒரு புறம் இந்தியாவின் ஒரு பக்கத்தை தான்தோன்றித்தனமாக சீனா கைப்பற்றிக்கொண்டு இருக்கின்றது. அதில் ஒரு இஞ்சி அளவு நிலத்தினை கூட பறிப்பதற்கு துப்பில்லாத மோடியின் மத்திய அரசும், தமிழக வெற்றிக் கழகமும் இலங்கையில் உள்ள கச்சத்தீவு தமக்கு சொந்தம் எனவும், கட்சத்தீவை திரும்பப் பெறுவோம் என்று சொல்வதும் வேடிக்கையாக இருக்கிறது. வரலாற்றை விஜய் படித்து இருக்க வேண்டும்.விஜய்க்கு நான் ஒரு புத்திமதி கூறுகின்றேன். கச்சத்தீவில் இருந்து ராமேஸ்வரம் ஏறத்தாழ 30 மைல் தொலைவில் உள்ளது. நெடுந்தீவில் இருந்து தொண்டி 30 மைல் தொலைவில் உள்ளது. கச்சத்தீவில் இருந்து கோதண்ட ரமர் கோவில் 30 மைல் தொலைவில் உள்ளது. ஆனால் தலைமன்னாரில் இருந்து 18 மைல் தொலைவிலே தனுஷ்கோடி இருக்கின்றது. அப்படி இருக்கும் போது, தனுஷ்கோடியை நாங்கள் ஏன் எங்கள் நாட்டினுடைய பகுதி என சொல்லவில்லை?

முடிந்தா விஜய் இதை செய்யுங்க

சட்டவிரோத இழுவைமடி தொழிலே தமிழக மீனவர்களுக்கும் எங்களுக்கும் இடையே நீண்ட காலமாக ஒரு பிரச்சனையாக இருக்கிறது. ஆனால் அதற்கு கச்சத்தீவு பரிகாரமாக முடியாது. இந்திய இலங்கை மீனவர்களின் பிரச்சினை முழுவதுமாக, நிரந்தரமாக தீர்க்கப்பட வேண்டும் என்றால் அதற்கு சட்டவிரோத இழுவைமடி தொழிலை நீக்க வேண்டும். முடிந்தால் விஜய் இதனை செய்ய வேண்டும். இதற்காக மத்திய அரசுடன் பேசி, அவர்கள் மூலமாக எங்களுடன் பேச்சுவார்த்தைக்கு வரலாம்.அப்போது கூட எங்கள் நாட்டின் ஒரு பகுதியான கச்சத்தீவை தருமாறு கேட்கலாமே தவிர மீட்க முடியாது. அரசியலுக்காக விஜய் கச்சத்தீவு பிரச்சினையை கையில் எடுத்திருப்பது கண்டிக்கத்தக்க விஷயமாகும். இவ்வாறு அவர் கூறினார்.

# பிரதீப் ரங்கநாதனின் ‘ட்யூட்‘ படத்தில் இருந்து முதல் பாடல் ‘ஊறும் பிளட்‘ வெளியானது!





விக்னேஷ் சிவன் இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன் நடித்த 'எல்.ஐ.கே' படமும் தீபாவளி வெளியாக உள்ளது. எஸ்.ஜே.சூர்யா, கீர்த்தி ஷெட்டி, யோகி பாபு, கவுரி கிஷண் உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகி உள்ள படம் 'எல்.ஐ.கே'. லலித்குமார் தயாரித்துள்ள இப்படத்துக்கு அனிருத் இசையமைத்துள்ளார். 7 ஸ்கிரீன் ஸ்டுடியோ நிறுவனம் தயாரித்திருக்கும் இப்படத்தை, விக்னேஷ் சிவன் மற்றும் நயன்தாரா இணைந்து நடத்திவரும் ரவுடி பிக்சர்ஸ் நிறுவனமும் தயாரித்துள்ளது. இப்படத்திற்கு அனிருத் இசையமைத்திருக்கிறார். இப்படத்தின் டீசர் வெளியாகி படத்தின் மீன ஹைப்பை ஏற்றி உள்ளது. 2040ல் நம்முடைய தமிழ்நாடு எப்படி இருக்கும் என இந்த படத்தில் காட்டி இருக்கிறார்கள் .பிரதீப் ரங்கநாதன் படம் என்றாலே அதில் ஒரு சுவாரஸ்யம் இருக்கும் அதே 'எல்.ஐ.கே' திரைப்படமும் நிச்சயம்

ட்யூட்' படத்தில் பிரதீப் ரங்கநாதனுக்கு ஜோடியாக பிரேமலு புகழ் மமிதா பைஜூ நடித்துள்ளார். மேலும், சரத்குமார், ரோகினி, ஹ்ரிதுஹரூன்,டிராவிட் மற்றும் பலர் நடித்துள்ளனர். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்கிறார். இப்படத்தில் இருந்து முதல் சிங்கிள் பாடல் தற்போது இணையத்தில் வெளியாகி உள்ளது. தமிழ் சினிமாவில் இளம் நட்சத்திரங்களாக தோன்றி ரசிகர்கள் மத்தியில் ஜொலித்து வருபவர்கள் பிரதீப் ரங்கநாதன் மற்றும் மமிதா பைஜூ. பிரதீப் கோமாளி படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகி வெற்றி கண்ட பிறகு, நடிகராக லவ் டுடே படத்தில் வெற்றி கண்டார். தொடர்ந்து அவர் நடிப்பில் அண்மையில் வெளியான டிராகன் திரைப்படம் ரசிகர்களிடையே அமோக வரவேற்பை பெற்று 100 கோடிக்கு மேல் வசூலை குவித்தது.'ட்யூட்' : பிரதீப் ரங்கநாதனின் 4வது படமாக உருவாகும் இப்படத்தை மைத்திரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்தை அறிமுக இயக்குநர் கீர்த்திஸ்வரன் இயக்கவுள்ளார். இவர் சுதா கொங்கராவின் சூரரைப் போற்று படத்தில் உதவி இயக்குநராக பணியாற்றிதாக கூறப்படுகிறது. இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு மார்ச் பூஜையுடன் தொடங்கி படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து முடிந்து தற்போது படத்தின் அடுத்தகட்ட பணிகள் நடந்து வருகிறது. 'ட்யூட்' திரைப்படம் தீபாவளிக்கு வெளியாக இருக்கும் நிலையில், இப்படத்தில் இருந்து முதல் சிங்கிள் பாடலான, 'ஊறும் பிளட்' படக்குழு வெளியிட்டுள்ளது. சாய் அபயங்கர் இசையில் பால் டப்பா இந்த பாடலை

பாடி இருக்கிறார்.

# இந்த வார ஓடிடி ரிலீஸ்..

**தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னட திரைப்படங்களின் லிஸ்ட்!**







ஒவ்வொரு வாரமும் விதவிதமான திரைப்படங்கள் மற்றும் வெப் தொடர்கள் ஓடிடி தளங்களில் ரிலீசாகி வருகிறது. அந்த வகையில் இந்த வாரம் ஓடிடி தளங்களில் ரிலீசாகும் திரைப்படங்கள் என்னென்ன என்பதை இந்த பதிவில் பார்ப்போம். அறிமுக ஹீரோ ஆதவன், ஷீலா, ஜாக்குலின் உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'கெவி'.

அச்சிடப்பட்டது, வெளியிடப்பட்டது மற்றும் சொந்தமானது DR.B.ANILKUMAR ,@ 407 தர்ணாகா , ஹைதராபாத் , தெலுங்கானா மாநிலம். DAIWIK PUBLICATIONS pvt.ltd இல் வெளியிடப்பட்டது.
SNEHITHA PRINTERS H.NO: 2-6 , வாரங்கல் மாவட்டம்.தெலுங்கானா மாநிலம் , ஆசிரியர் DR.B.ANILKUMAR ,RNI NO TELTEL/2021/ 81079 , செல்: 7702866885 ,vijethatelugudaily@gmail.com